**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**<u>O.S.No. 39 /2024</u>**

**2026 –ம் வருடம் ஜூலை மாதம் 29ம் நாள் புதன்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. திலகவதி என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**திரு. விஜயராஜ் த/பெ. லிங்கன் வயது. 49 ஊர். புடியங்கி**

---

**<u>PW1 குறுக்கு விசாரணை 11.50 A.M.</u>**

1. தாவா சொத்தின் 25 சென்ட் பூமியை 4ம் பிரதிவாதியிடம் குத்தகைக்கு பெறப்பட்டு நான் விவசாயம் 4, 5 வருடங்களாக செய்து வந்தேன் என்றால் சரியல்ல. 12 வருடங்களாக நான்தான் அனுபவம் செய்து வருகிறேன். 12 வருடங்களாக நான்தான் அனுபவம் செய்து வருகிறேன் என்ற விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 25 சென்ட் பூமியை P.K.மாதன் என்பவர் 4ம் பிரதிவாதியிடம் குத்தகைக்கு வாங்கி தற்போது விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தற்போது புதராக உள்ளது. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், P.K.மாதன் விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி எனக்கு குத்தகைக்கு தராமல் P.K.மாதனுக்கு குத்தகைக்கு விட்டதால்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. ஏற்கனவே எனது குறுக்கு விசாரணையில் எங்களுக்கு

சம்மந்தப்பட்ட ஒரு ஏக்கர் பூமி இல்லாமல் வேறு இரண்டு ஏக்கர் சேர்த்து மூன்று ஏக்கருக்கு 4ம் பிரதிவாதி விஜயலட்சுமி ஆவணம் தயார் செய்துள்ளார், அதேபோல் தாவா சொத்துகளையும் தனது பெயருக்கு பத்திரம் செய்து கொள்வார் என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி ஏற்கனவே தன் பெயருக்கு எழுதிக்கொண்ட 3 ஏக்கர் பூமியின் பத்திரங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த 3 ஏக்கர் பூமி எந்தெந்த சர்வே எண்ணில் உள்ளது என்று சொன்னால் பழைய சர்வே எண். 881/1, 882/2, 882 ஆகும். எந்த வருடம் மேற்படி 3 ஏக்கர் சொத்தை அவரது பெயருக்கு மாற்றிக்கொண்டார் என்றால் 2017ம் வருடம் ஆகும். 2017 முதல் 2026 வரை 4ம் பிரதிவாதி அவரது பெயருக்கு மாற்றிக் கொண்ட ஆவணங்கள் செல்லாது என்று அறிவிக்க கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பத்திரங்களை இரத்து செய்வதாக கூறியதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

3. 2024ம் வருடம் இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு காவல் நிலையத்தில் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த 2024ம் வருடத்திற்கு பின்னர் 4ம் பிரதிவாதி அவரது பெயருக்கு மாற்றிக் கொண்ட ஆவணங்கள் செல்லாது என்று அறிவிக்க கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கும் 4ம் பிரதிவாதிக்கும் பேச்சு வார்த்தை இல்லாத நிலையில்

எந்த நம்பிக்கையில் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்காமல் இருந்தேன் என்றால் குடும்ப உறுப்பினர்களை வைத்து பேசினேன், 6 மாதங்களில் இரத்து செய்து தருவதாக கூறினார். குடும்ப உறுப்பினர்கள் என்று நான் சொல்லியுள்ளது எனது பெரியப்பா, சித்தப்பா என்று சொன்னால் 3ம் நபர்கள். தாவா சொத்து சம்மந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடந்து அதில் 4ம் பிரதிவாதிக்குதான் சொத்து சேரும் என தீர்மானம் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஊர் பஞ்சாயத்தில் சொத்து 4ம் பிரதிவாதிக்கு உரிமையானது என்று சொன்னதை ஒப்புக்கொள்ளாமல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. என்னிடம் காட்டப்படும் பஞ்சாயத்து தீர்மானம் 2024ல் பேசப்பட்டது என்றால் சரிதான். அதில் ஊர் தலைவர் காரி மற்றும் 51 நபர்கள் பஞ்சாயத்து தீர்மானத்தில் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பஞ்சாயத்து தீர்மானத்தில் "P.M.கிருஷ்ணன் காலஞ்சென்ற பிறகு அவரது மனைவி விஜயலட்சுமி விவசாயம் செய்து வருகிறார். இந்நிலையில் விஜயலட்சுமி குடும்ப சூழ்நிலை காரணமாகவும் அவசர தேவைக்காகவும், அந்த பூமியை P.L. விஜயராஜ் என்பவருக்கு ரூ. 2,00,000/– பெற்றுக்கொண்டு மூன்று வருடங்களுக்கு வாய்மொழியாக குத்தகைக்கு கொடுத்துள்ளார். இந்நிலையில் குடும்ப சூழ்நிலை காரணமாக விஜயலட்சுமி என்பவர் இந்நிலத்தை விற்கவேண்டி சூழ்நிலை உள்ளதால் P.L. விஜயராஜ் என்பவரிடமே கிரையத்திற்கு வாங்கி கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதன்பேரில் அவர் மிகக் குறைந்த விலைபேசி உள்ளது. இதனால் விஜயலட்சுமி வேறு நபருக்கு விற்க முற்பட்டுள்ளார். இந்நிலையில்

விஜயராஜ் என்பவர் இந்நிலம் தனக்கு பாத்தியம் இருப்பதாக கூறிய நிலையில், புடியங்கி ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் இரு தரப்பினரையும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியதில் ஆடா பூமி (இரண்டு பேடு) P.M.கிருஷ்ணன் மனைவி விஜயலட்சுமி என்பவருக்குத்தான் சொந்தம் என்றும், P.L. விஜயராஜ் என்பவருக்கும் (இரண்டு பேடு) ஆடா பூமிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் புடியங்கி ஊர் தலைவர் மற்றும் ஊர் பொது மக்களாகிய நாங்கள் நன்றாக விசாரித்து முடிவெடுத்ததன் பேரில் உறுதி கூறுகிறோம்" சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

5. எனது தாத்தாவிற்கு சம்மந்தப்பட்ட எல்லா பூமியையும் பாகப் பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை செய்த பின்னர் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த உரிமமும் இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு பிரதிவாதி கேட்டுக்கொள்கிறார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி 3 ஏக்கர் அவரது பெயருக்கு மாற்றிக்கொண்டார் என்பதற்கு விளம்புகை பரிகாரம்கோரிதான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the Plaintiff / Plaintiff's Counsel and admitted by the witness to be correct.**

**Sd/– G. Amirdham, 29.07.2026**
**District Munsif,**
**Kotagiri.**